# சுருக்கம்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் – கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் – 2013–2014–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – 2 அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் 5 அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(பிந3)துறை**

அரசாணை (நிலை) எண்:93 | நாள்:17.10.2013

விஜய – புரட்டாசி 31
திருவள்ளுவர் ஆண்டு 2044
படிக்கப்பட்டவை:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.பி1/238/2011, நாள் 02.05.2013, 12.06.2013 மற்றும் 01.07.2013.

*****

ஆணை:

26.04.2013 அன்று நடைபெற்ற இத்துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது பதிலளித்து பேசிய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்த மக்களின் நலனுக்காக மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்படும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே தங்களின் உயர் வகுப்புகளை தொடரும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 5 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் ஆக மொத்தம் 7 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நிலை உயர்த்துவதற்காக 1 கோடியே 69 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள். இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் 7 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நிலை உயர்த்துவதற்கான செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, கீழ்க்கண்ட 7 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நிலை உயர்த்தி ஆணையிடுகிறது.

| வ. எண். | பள்ளியின் பெயர் | நிலை உயர்த்துதல் |
|---|---|---|
| 1. | அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளி, நாராயணன்தேவன்பட்டி, தேனி மாவட்டம் | உயர்நிலைப் பள்ளியாக |

| | | |
|---|---|---|
| 2. | அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளி, புல்லக்காபட்டி, தேனி மாவட்டம் | உயர்நிலைப் பள்ளியாக |
| 3. | அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளி, பூச்சிப்பட்டி, மதுரை மாவட்டம் | மேல்நிலைப் பள்ளியாக |
| 4. | அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளி, கே.பெருமாள்பட்டி, மதுரை மாவட்டம் | மேல்நிலைப் பள்ளியாக |
| 5. | அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளி, பூசலபுரம், மதுரை மாவட்டம் | மேல்நிலைப் பள்ளியாக |
| 6. | அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளி, வே. கள்ளப்பட்டி, மதுரை மாவட்டம் | மேல்நிலைப் பள்ளியாக |
| 7. | அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளி, சேவுகம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் | மேல்நிலைப் பள்ளியாக |

3. மேலே பத்தி 2–ல் தெரிவிக்கப்பட்டுள்ள 2 அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தும்போது, இப்பள்ளிகளில் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள 2 நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களை ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4800 + தனி ஊதியம் ரூ.750 என்ற ஊதிய ஏற்ற விகிதத்தில் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தி ஆணையிடப்படுகிறது. நிலை உயர்த்தப்பட்ட 2 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் மொத்தம் 10 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300–34800 + தர ஊதியம் ரூ.4600 என்ற ஊதிய ஏற்ற விகிதத்திலும், ஒரு பள்ளிக்கு ஒரு இளநிலை உதவியாளர் பணியிடம் வீதம் 2 பள்ளிகளுக்கு 2 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ரூ.5200–20,200 + தர ஊதியம் ரூ.2400 என்ற ஊதிய ஏற்ற விகிதத்திலும், ஒரு பள்ளிக்கு ஒரு ஆய்வக உதவியாளர் வீதம் 2 பள்ளிகளுக்கு 2 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் ரூ.5200–20,200 + தர ஊதியம் ரூ.2400 என்ற ஊதிய ஏற்ற விகிதத்திலும் இப்பணியிடங்கள் நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டிற்கு தற்காலிகமாக தோற்றுவித்து ஆணையிடப்படுகிறது.

4. 5 அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தும்போது, இப்பள்ளிகளில் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள 5 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களை ரூ.15600–39,100 + தர ஊதியம் ரூ.5700 என்ற ஊதிய ஏற்ற விகிதத்தில் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தியும், ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம், 5 பள்ளிகளுக்கு 45 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ரூ.9300–34,800 + தர ஊதியம் ரூ.4800 என்ற ஊதிய ஏற்ற விகிதத்தில் இப்பணியிடங்கள் நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டிற்கு தற்காலிகமாக தோற்றுவித்தும் ஆணையிடப்படுகிறது.

5. மேலே பத்தி– 2–ல் நிலை உயர்த்தப்பட்ட 7 அரசு கள்ளர் பள்ளிகளுக்கு புதிய ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்களை 2013–2014–ம் நிதியாண்டில் தோற்றுவிப்பதற்கு ஆண்டொன்றுக்கு ஒப்பளிக்கப்படும் செலவினமான ரூ.1,89,14,760/–ஐ (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தொன்பது இலட்சத்து பதினான்காயிரத்து எழுநூற்று அறுபது மட்டும்) செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80. பொது – 101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – I - திட்டத்தில் சேராதது – AE சீர்மரபினர் பள்ளிகள் – 01 சம்பளங்கள்" (த.தொ.கு.2225–80–101–AE–0105)

6. பள்ளிக்கல்வித்துறையில் பள்ளிகளை நிலை உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை மேலே பத்தி 2–ல் நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகள் பூர்த்தி செய்வதை உறுதி செய்து கொள்ளுமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 2–ல் நிலை உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் 3 பாடப்பிரிவுகளை தோற்றுவித்துக் கொள்ளவும், எந்தப் பாடப்பிரிவிற்கு முன்னுரிமை அளித்து துவக்குவது என்பது குறித்து மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநரை கலந்தாலோசித்து முடிவு செய்து கொள்ளுமாறும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இது ஒரு புது துணைப்பணி குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கும் ஆணைகள் நிதி(வரவு–செலவு–பொது–I)த்துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத்தை பெறுவதற்கு உரிய படிவத்தை இரு படிகளில் பூர்த்தி செய்து இவ்வரசாணையின் நகலினையும் இணைத்து நிதி(வரவு–செலவு–பொது–I)த்துறைக்கு அனுப்பி பெற்று கொள்ளுமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2013–2014–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைக்கான உரிய விளக்கக் குறிப்பினை நிதி(வரவு–செலவு–பொது–I)/(பி,மிபி(ம)சிந)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 2–ல் ஆணையிட்டுள்ளபடி பள்ளிகள் நிலை உயர்த்தப்பட்டதினால், நிலை உயர்த்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கும், ஏனைய ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத அனைத்து பணியாளர்களுக்கும் அவ்வப்போது சம்பளம் மற்றும் இதர படிகள் கருவூலத்திலிருந்து பெற்று வழங்கும் அதிகாரத்தை, அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு அளித்து அரசு ஆணையிடுகிறது.

10. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.58945/ மை.ம.ஆ.பி(CMPC)/2013, நாள் 15.10.2013 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1628 (ஆயிரத்து அறுநூற்று இருபத்தெட்டு)—ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அருள்மொழி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை—5.
மாநில கணக்காயர், சென்னை—18/பெயரில்
மாநில கணக்காயர், (துணிக்கை—I) சென்னை—18/(பெயரில்).
மாநில கணக்காயர், (துணிக்கை—II) சென்னை—18/(பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு), சென்னை—8.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை—20.
மாவட்ட ஆட்சியர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல்.
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை—20.
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அலுவலர், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல்.
கருவூல அலுவலர், தேனி மற்றும் திண்டுக்கல்
நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்,
முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.
முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினா நலத்துறை, சென்னை—9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர்,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை—9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர், நிதித்துறை, சென்னை—9.
நிதி(பிமிபி/வரவு—செலவு(பொது I மற்றும் II)/மை.ம.ஆ.பி)த்துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு /உபரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

17/10/13
பிரிவு அலுவலர்
17/10/13